RESEARCH ARTICLE

DOI: 10.34256/ijot2141

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# சாத்தனார் போதிக்கும் விருந்தோம்பல் அறம் : மணிமேகலைக் காப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

முருகையா சதீஸ் [அ,*]

[அ] தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# Hospitality Virtue Taught by Saththanar: Study Based on The Manimekalai

Murukaiya Sathees [a,*]

[a] Department of Tamil, University of Jaffna, Sri Lanka.

*Corresponding author Email: satheesmurukaiya@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2141

Received: 06-09-2021; Revised: 01-10-2021; Accepted: 03-10-2021 Published: 06-10-2021

**Abstract:** Manimekalai is an epic created by Satan in order to uplift the degenerate social trend. In this he has also emphasized Buddhist thought by emphasizing hospitality as a high virtue. Hunger is natural for living things, especially monitors. That needs to be addressed. He points out that the hungry need hospitality. Satan claims that medicine is food for the hungry and that disease must be avoided. The high opinion is that all people, irrespective of country, language or ethnicity, should be protected from the scourge of famine. The survey was conducted with the aim of building a famine-free society with the lofty goal of eradicating the deadly disease of hunger that plagued human society. Satan's Manimekalai has been used primarily for this study, and related essays, journals, and electronic commentaries have also been used as research data. The study also suggests that more such studies should be conducted by researchers in view of famine-free social formation.

**Keywords:** Saththanar, Manimekalai, Community Need, Hospitality, Teaching

## முன்னுரை

ஐம்பெருங் காப்பியங்களில் மணிமேகலை இரண்டாம் காப்பிய நூல் ஆகும். இது இரட்டைக் காப்பியங்களில் ஒன்று. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. (முனைவர்.தேவிரா, தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம் 122). மணிமேகலையைக் காப்பியத்தலைவியாகப்படைத்து அறக்கருத்துக்களை வலியுறுத்துவதனூடாகப் பௌத்தமத உண்மையை இக்காவியம் போதிக்கிறது. முப்பது காதைகளையும், 4856 அடிகளையும் கொண்டு அமைந்து உயர் அறங்களை நிலைநிறுத்துகின்றது. பசி என்பது ஜீவராசிகளுக்குக், குறிப்பாக மானிடர்களுக்கு இயற்கை. அது தீர்க்கப்பட வேண்டும். பசித்தோர்க்கு விருந்தோம்ப வேண்டும். இதுவே உயர் அறம் பசிப்பிணிக்கு மருந்து உணவு என்றும், அந்நோய் ஒழிய வேண்டும் என்றும் சாத்தனார் சாடுவது சிறப்புக்குரியது. சுவாமி விபுலானந்தர் கூட "பசியோடு இருப்பவன் சிந்திக்க முடியாது, அவனுக்கு உணவு கிடைக்க உத்தரவாதம் வேண்டும்" என்கிறார். பாரதியாரும் "தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்…" என்கிறார். (தங்கமணி.கே, மணிமேகலை பற்றி : 47) எனவே பௌத்த மதப் போதனைகளுக்கு அப்பால் பசித்தோர்க்கு உணவளிப்பதையே மணிமேகலை வலியுறுத்துவதனை இக்கட்டுரை ஆதாரமாக்க முயல்கின்றது.

## ஆய்வு நோக்கம்

மணிமேகலைக் காப்பியத்தினூடாகச் சாத்தனார், பொத்தமதச் சிந்தனைகளை விதைத்திருந்தாலும் அதனைக் கச்சிதமாகக் கூறவே விருந்தோம்பல் எனும் பண்பாட்டு அறத்தினை ஒரு உத்தியாகப் பயன்படுத்தியிருக்கிறார். ஆயினும் விருந்தோம்பல் அறமானது சமூகத்திற்குத் தேவையானது. பசித்தோர்க்கு விருந்தோம்ப வேண்டிய கடமை ஒவ்வொருவரையும் சாரும். இதுவே உயர் அறம். பசி என்ற பிணிக்கு மருந்து உணவே ஆகும். எனவே மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டிருக்கும் பசிப்பிணி என்னும் கொடிய பிணியை ஒழிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பஞ்சமற்ற சமூகத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறை மற்றும் விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குச் சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியம் முதன்மைத்தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அது சார்ந்த கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## உணவு அறத்தை வலியுறுத்திய சூழல்

சாத்தனார் வாழ்ந்த காலம் செல்வச்சீரழிவு, தார்மீக வீழ்ச்சி, அரசியல் நெறி பிழைத்தல் முதலிய சில சீர்கேடுகள் நிலவிய காலம். ஆனால் இங்கோவடிகள் அக்குறைபாடுகள் நேர்வதற்கெல்லாம் முதற்காரணமாக இருப்பது ஊழ்வினையே என்று அமைதி காண முயன்றார். எனினும் ஊழின் ஆற்றலைச் சாத்தனாரும் உணர்ந்தவராயினும் அடிகளைப் போன்று அமைதிகாண இவர் விரும்பவில்லை. சமூகச்சீர்கேடுகளைக் கண்டும் காணாதவர் போல ஒதுங்கி நிற்க விரும்பாத சாத்தனார் அவற்றைத் தம் காப்பியத்தில் எடுத்துக் காட்டித் தீர்வு காணவும் முற்பட்டார். (பொருளாதார முரண்பாட்டின் காரணமாக நாட்டிலே பஞ்சம் தலை விரித்து ஆடுகிறது. வரிசெலுத்த முடியாதவர்கள் சிறையில் வாடுகின்றனர். பசியுறும் ஆருயிர் மக்கள் பலராவர். இவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பினார் சாத்தனார். சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றும் தார்மீக மறுவாழ்வுப் பணிக்கு வழிகோலிய அவர், மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டிருந்த பசிப்பிணி எனும் கொடிய பிணியை மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் காப்பியத்தினைப் படைத்து மணிமேகலையை அப்பணியில் ஈடுபடுத்தினார் (Seeththalaichchaththanar, 1998; Gemstone, 1990; Devira, 2007)..

## சிறந்த தர்மம்

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது உலகில் உறையும் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவதுதான் சிறந்த அறமாகும் என்பதை மணிமேகலைக் காப்பியம் போதிக்கிறது. இவற்றைத்தவிர உயர்ந்த அறம் வேறு இருப்பதாகத் தெரியவில்லை என்பதனையும் வலியுறுத்துகின்றார் சாத்தனார். இதனை,

“அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்

மறவாது இதுகேள்: மண் உயிர்க் கெல்லாம்

உண்டியும், உடையும், உறையுளும் அல்லது

கண்டது இல்” (காதை.25:228 - 231) என்ற செய்யுளடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வடிகள் முதலில் உணவளித்தலையே கூறுகின்றன. உணவளித்தலே தலைசிறந்த தர்மம் என்று உரைத்தன. உடையற்றோர்க்கு உடையும், இடமில்லாதவர்களுக்கு இடமும் அளிப்பது உணவளிப்பதுடன் ஒட்டிய அறமாகும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இதனையே வள்ளுவரும்,

“பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” (குறள்.322) என்கிறார். கிடைத்த உணவைப் பங்கிட்டு உண்டு பல உயிர்களையும் பாதுகாப்பதுதான் அறநூலோர் தொகுத்துரைத்த தர்மங்களில் எல்லாம் சிறந்த தர்மமாகுமென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

## உயிர்க்கொடை

பசித்தோர்க்கு உணவு கொடுக்க வேண்டும் என்னும் நல்லறத்தையே பண்டைய நூல்கள் எல்லாம் வலியுறுத்துகின்றன. மணிமேகலை நூல் இந்த ஒரே கொள்கையைத்தான் எல்லாவற்றிலும் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. கதாநாயகியான மணிமேகலை பசித்த உயிர்களுக்கெல்லாம் உணவிட்டுக் காப்பதையே கடமையாகக் கொண்டாள். தன் ஆயுள் முழுவதும் இந்த அறத்தையே ஆற்றி வந்தாள். இது மணிமேகலை வரலாற்றின் உயிர்நாடி. இதனால் மக்களுக்கு உணவளிப்பதே சிறந்த தர்மம் ஆகிறது. இதுவே மக்கள் சமுதாயத்தை அமைதியுடன் வாழச் செய்யும் வழி என்பதை அறியலாம். அணுக்களின் நெருக்கத்தால் தோன்றியது இவ்வுலகம். இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்க வேண்டும். இவ்வாறு உணவளிப்பவர்கள் “உயிர் கொடுத்துக் காப்போர்” ஆவார். இதனையே,

“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (காதை. 11: 95 - 96)

என்று மணிமேகலை கூறுகின்றது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே…” என்பது புறநானூற்றின் 18ஆவது செய்யுளில் காணப்படும் அடியாகும். இவ்வடியிலே, உணவால்த்தான் உயிர்வாழ முடியும். உணவின்றேல் உயிர்வாழ முடியாது. உணவு கொடுப்போர்தான் உயிரைக் கொடுப்போர் ஆவார் என்ற கருத்தைக் காணலாம். பண்டைய தமிழரின் இக் கொள்கையை மணிமேகலை அப்படியே பின்பற்றுவது குறிப்பிடத்தக்கது.

## பசிநோயின் விளைவுகள்

பசியை ஒரு பிணியாக உருவகித்து “பசிப்பிணி” என்பது “ஒரு பாவி” என்றும் அதைப்போலக் கொடுமை செய்வது வேறொன்றுமில்லை என அதனால் விளையும் கொடுமைகளைச் சாத்தானார் கூறுகின்றார். இதனையே,

“குடிபிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்;

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;

நாண் அணிகளையும்; மாண் எழில் சிதைக்கும்;

பூண்முலை மாதரொடு புறம் கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவி” என்று எடுத்துரைக்கின்றார் சாத்தனார். குடிப்பிறப்பு, பெருமை, கல்வி, நாணம், அழகு முதலியவற்றைப் பசிக்கொடுமை சிதைப்பதாகக் கூறப்படுகின்றது. இதிகாசப், புராணக் கதைச்சம்பவங்களை எடுத்துக்காட்டியும் பசியின் கொடுமைகளால் ஏற்பட்ட விளைவுகளைக் கூறுகிறார். உதாரணமாக, பசியினால் மனிதர்கள் எந்த இழிநிலைக்கும் சென்று விடுவார்கள் என்பதை அந்தணனாக மாறிய கோசிகன் என்னும் விசுவாமித்திர முனிவர் பெரும்பசி பொறுக்கமுடியாமல், தெருவில் இறந்து கிடந்த நாயைக்கண்டு பசியாறத்துணிந்த கிளைக்கதையை விளக்குகின்றார். மேலும், தாயன்பு கூட பசியினால் வற்றிப்போக, தாம் பெற்ற பிள்ளைகளைத் தாய்மார் கவனிக்காததால் ஒழுக்கம் கெட்டுப்போகும் அவலங்களையும் எடுத்துக்காட்டி “உணவுத்தானத்தை” வலியுறுத்துகின்றார் சாத்தனார்.

## உணவே மருந்து

மணிமேகலையின் ஆசிரியர் “ஆருயிர் மருந்து” என்று உணவைக் குறிப்பிடுகின்றார். மணிமேகலையில் ஏழு இடங்களில் உணவைக் குறிப்பிடும் போது “ஆருயிர் மருந்து” என்னும்

 10.34256/ijot2141

தொடரால் அழைக்கின்றார். “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே…” (புறம்.18) எனும் புறநானூற்று அடியின் கருத்தைக் கொண்டுதான் இத்தகைய பெயரை அவர் அமைத்திருக்க வேண்டும். சாத்தனாரும் “ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து” என்றும் “ஊண் உடைய மாக்கட்டு உயிர் மருந்து இது” என்று குறிப்பிடுகின்றார். மேலும் இப்பசிப்பிணிக்குரிய உணவுக்கொடையை இரு வழிகளில் விளக்குகின்றார் சாத்தனார். ஆபுத்திரன் கதை மற்றும் மணிமேகலையின் அறப்பணி முதலியவற்றின் மூலம் உணவுக்கொடை விளக்கப்பட்டுள்ளன. மக்கள், தேவர் என்ற இருவருக்கும் ஏற்ற ஒரு முடிவான அறம் உயிர்களின் பசிப்பிணியை நீக்குவதுதான். இதுவே மிகப்பெரிய நல்ல தர்மம் என்று அறவண அடிகள் மூலம் மணிமேகலைக்குக் கூறப்படுகின்றது. இதனை,

“மக்கள் தேவர் என இரு சார்க்கும்

ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்;

பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்

தவப்பெரு நல்லறம் சாற்றினர்” (காதை.12 : 115 - 118) என்ற பாடலடிகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

பாத்திரம் பெற்றகாதையில் ஆபுத்திரனின் உணவுக்கொடை பற்றியும் சேப்படுகின்றது. இவன் சிந்தாதேவி எனும் தெய்வத்தால் “அமுதசுரபி” எனும் பாத்திரத்தைப் பெற்று மக்களின் பசியைப் போக்குகின்றான். இவனது நல்லறம் கண்டு இந்திரன் வரமளிக்க மனமிரங்கி வந்தான். இது ஆபுத்திரனின் உணவுக் கொடையின் சிறப்பினாலேயே ஆகும். இதன் போது,

“வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து, அவர்

திருந்துமுகம் காட்டும் என் தெய்வக் கடிஞை” (காதை.14 : 44 - 45)

என்று ஆபுத்திரன் தன் தெய்வக்கடிஞை பற்றி இந்திரனுக்கு எடுத்துக் கூறுகிறான். எனவே இக்கதைகளின் மூலம் பசிப்பிணி போக்கும் அறம் வலியுறுத்தப்படுகின்றன.

## வறியோர்க்கு உணவளித்தல்

உண்மையில் உணவில்லாமல் தவிக்கும் வறியோர்க்கே உணவளிக்க வேண்டும். வேறு வேலை செய்து பிழைக்க முடியாத நோயாளிகள், அங்கம் பழுதடைந்தோர் போன்றவர்களைக் காப்பதுதான் நல்லறம். நாம் செய்யும் உதவிக்கு மாற்றுதவி செய்யும் ஆற்றல் படைத்தோருக்கு உதவுவது அறம் என்ற துறையில் அடங்காது. இவ் உண்மையை மணிமேகலை எடுத்துக் காட்டுகின்றது. இதனையே வள்ளுவரும்,

“வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்

குறி எதிர்ப்பை நீரது உடைத்து” (குறள்.221) என்கிறார். ஏழைகளுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகையாகும். வேறு கொடைகள் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையுடையன என்கிறார். மணிமேகலையிலும் ஆபுத்திரன் வறியோர்க்கு உணவு கொடுப்பது காட்டப்படுகின்றது. ஆபுத்திரன் தனது பிச்சைப் பாத்திரத்தைக் கையிலெடுத்து, குற்றமற்றோர் வாழும் வீடுகள் தோறும் சுற்றித்திரிந்து பிச்சை எடுப்பான். அதனைப் பரிமாறி உண்ணும் பொருட்டு, “கண்தெரியாதவர்களே! காதுகேட்காதவர்களே! கால் முடம்பட்டு நீண்ட வழி நடக்க முடியாதவர்களே! ஆதரவற்ற அநாதைகளே! பிணியால் வருந்துகின்றவர்களே! அனைவரும் உணவுண்ண வாருங்கள்” என்று கூவி அழைப்பான். அவனிடம் வந்து கூடுகின்றவர்களுக்கெல்லாம் அன்னம் இடுவான். மீதப்பட்ட உணவையே தான் உண்பான். அந்தப் பிச்சைப் பாத்திரத்தையே தலைக்கு அணையாகவும் வைத்துக்கொண்டு படுத்து உறங்குவான். இதனை,

“ஐயங்கடிஞை கையில் ஏந்தி

மை அறு சிறப்பின் மனை தொறும் மறுகிக்,

காணார், கேளார், கால் முடப்பட்டோர்

பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்

யாவரும் வருக...” (காதை.13 : 109 - 113) என்ற பாடலடிகள் கூறுகின்றன. இதனால் உணவு பெறத்தக்கவர் யார் என்பதை அறியலாம். மேலும் மணிமேகலை தன்னுடைய அமுதசுரபி மூலம் அனைவருக்கும் உணவு கொடுத்தமையும் நோக்கத்தக்கது. காஞ்சி நகரத்தில் பஞ்சம் குடிகொண்டது. மக்கள் பஞ்சத்தால் பட்டினிக்கு இரையானார்கள். மற்றைய உயிர்களும் மடிந்தன. இக்காலத்தில் மணிமேகலை அந்நகரில் தங்கி அனைவருக்கும் அமுதசுரபியின் உதவியுடன் உணவளித்தாள் என்று சாத்தானார் கூறுகின்றார். மணிமேகலை அமுதசுரபியைக் கையில் ஏந்தி, எல்லா உயிர்களும் உணவுண்ண வருக என்று அழைப்பாள். அவ்வூரிலே பதினெட்டு மொழிகளைப் பேசும் பல நாட்டு மக்களும் இருந்தனர். அவர்களிலே கண் தெரியாதவர்கள், காதுகேட்காதவர்கள், கால் நொண்டியானவர்கள், அநாதைகள், ஊமைகள், நோயாளிகள், தவக்கோலமும் விரதமும் உடையவர்கள், பசிநோயால் வருந்தியவர்கள், சோம்பலால் வறுமையுற்றவர்கள் யாவரும் வந்து கூடுவார்கள்.

நூறாயிரம் விலங்கினமும் வந்து சூழும். ஏனைய உயிர்களும் வந்து சுற்றிக் கொள்ளும். இவர்களுக்கெல்லாம் மணிமேகலை உணவிடுவாள். அவள் கொடுக்கும் உணவை அவர்கள் உண்பார்கள் அவ்வுணவு உயிரைக் காக்கும் மருந்தாக இருந்தது. பசித்தோர் மேலும் மேலும் நாலா திசைகளிலிருந்தும் வந்து குவிந்து கொண்டேயிருந்தனர். மணிமேகலை அவர்கள் அனைவருக்கும் வேண்டுமட்டும் அன்னமிட்டுக் காத்தாள். சோறு கொடுப்பதில் அவள் சோர்வடையவே இல்லை. அவளிடம் உணவு பெற்ற அனைவரும் அவளைப் புகழ்ந்து போற்றிவிட்டுப் போனார்கள். இச்செய்திகளை,

“அங்கையின் ஏந்திய அமுதசுரபியை

வைத்து நின்று “எல்லா உயிரும் வருக” என

பைத்து அரவு அல்குல் பாவைதன் கிளவியின்

மொய்த்தமூவ வறு பாடை மாக்களில்

காணார், கேளார், கால் முடப்பட்டோர்

......... பசிப்பிணி தீர்த்த பாவையை ஏத்திச்

செல்லும் (காதை.28 : 218 - 235) என்ற பாடலடிகள் மூலம் சாத்தனார் வெளிப்படுத்துகின்றார். மணிமேகலை - நாடு, மொழி வேறுபாடு இல்லாமல் வறியோர் அனைவருக்கும் உணவளித்தாள். விலங்கு, பறவை முதலிய உயிர்களுக்கும் உணவிட்டாள். இவ் உண்மையை இவ் அடிகள் கூறுகின்றன. மணிமேகலை கொடுத்த உணவு “அருந்தியோர்க் கெல்லாம் ஆர் உயிர் மருந்தாய்...” அமைந்தது. இப்பசிப்பிணி தீர்த்த மணிமேகலையைச் சாத்தனார் “பசிப்பிணி தீர்த்த பாவை” என்றும் குறிப்பிடுகின்றார். தாம் செய்த உதவிக்கு எதிர் உதவி செய்யும் இயல்புள்ளவர்களுக்கு உணவளிப்பது உண்மையான அறமாகாது. அது அறமெனும் பெயரால் செய்யப்படும் வியாபாரமாகும். ஏழை மக்களின் கொடிய பசியைப் போக்குவதே உண்மையான அறம். இத்தகைய அறத்தைச் செய்கின்றவர்களால்தான் உலகிலே உண்மையான ஒழுக்க நெறி காப்பாற்றப்படுகிறது. இக்கருத்துக்களைச் சாத்தனார்,

“ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்

ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை” (காதை. 11: 92 - 94) என்ற அடிகளின் மூலம் கூறுகின்றார். இவ்வடிகள் பரம ஏழைகளுக்கு உணவளிப்பதே உண்மையான அறம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

## விருந்தோம்பலின் சிறப்பு

உணவின் அவசியத்தினைச் சாத்தனார் “காயசச்சண்டிகை”யின் கதைமூலம் எடுத்துக் கூறுவதைக்காணலாம். காயசச்சண்டிகையானவள் “யானைத்தீ” என்னும் கொடும்பசியால் துன்புற்றாள். அமுதசுரபியிலிருந்து உணவைப் பெற்று உண்டவுடன் அவளுடைய பசிநோய் தீர்ந்தது. மேலும்,

உதயகுமரன் தன்பேரில் காதல் கொண்டிருக்கிறான் என மணிமேகலை அஞ்சி காயசண்டிகை போல மாற்றுருவம் கொண்டு சிறையில் அனைவருக்கும் உணவளித்தாள். அதனைக் கேள்வியுற்ற சிறைக்காவலர்கள் வியந்து அரசனுக்குத்தெரிவித்தனர். மணிமேகலையும் பாத்திரத்தின் பெருமையை எடுத்துக்கூறினாள்.

"தெய்வம் தந்தது திப்பியம் ஆயது

யானைத் தீ நோய் அரும்பசி கெடுத்தது

ஊன் உடைய மாக்கட்கு உயிர் மருந்து இது…" என மணிமேகலை கூறக்கேட்டு, அவளின் ஆலோசனையின் படி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினான், இச்செய்தியானது சமுதாயத்தில் உணவின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அத்துடன் 28 தினங்கள் இந்திரவிழா நடக்கவிருக்கிறது. மேற்படி விழாவிற்காக முரசறைபவன் பல வேண்டுகோள்களை விடுத்து இறுதியாக,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி

அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்" என நிறைவு செய்கிறான். இவ்வேண்டுகோள்கள், அரசன் நிறைவேற்றவேண்டிய கடமைகளாகக் காட்டுகின்றார் சாத்தனார். நாட்டிலே நீக்க வேண்டிய விடயங்களாகப், பசி, பிணி, பகை என்பன கூறப்படுகின்றன. இம் மூன்று விடயங்களிலும் முன்னிற்பது பசி தீர்த்தலாகும். இதை மன்னனின் கட்டாய கடமையாகச் சாத்தனார் வலியுறுத்துவது சமூகத்தில் உணவின் அவசியத்தையும், விருந்தோம்பலின் சிறப்பினையும் எமக்குக் காட்டுகின்றது.

## விருந்தோம்பலின் பயன்

பசித்தோர்க்குச் சோறு கொடுப்பவர்களே மறுபிறப்பில் நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோராகப் பிறப்பார்கள். அவர்கள் எல்லாப் பிறவிகளிலும் நல்லறங்களையே புரிவார்கள். இறுதியில் பிறவா நெறியை அடைவார்கள் என்றும் மணிமேகலை கூறுகின்றது. சென்ற பிறப்பிலே மணிமேகலை இராகுலன் என்பவனுக்கு மனைவியாக இருந்தாள். அப்போது அவள் 'சாதுசக்கரன்' என்னும் முனிவனை உபசரித்து உணவளித்தாள். அப்புண்ணியம் அவளைத் தொடர்ந்து நின்று, இறுதியில் அவள் பிறப்பு இன்றி முத்தி பெறுவதற்கு மூலமாயிற்று என்று மணிமேகலா தெய்வத்தின் ஊடாக மணிமேகலையின் பழம்பிறப்பு உணர்த்தப்பட்ட போது, சென்ற பிறப்பில் மணிமேகலை, உணவு அறம் மேற்கொண்டு பெற்ற பயன் கூறப்பட்டுள்ளது. இதனை,

"பகைஅறு பாத்தியன் பாதம் பணிந்து, ஆங்கு

அமரகேள்! நின் தமர் அலம் ஆயினும்

அம்தீம் தண்ணீர் அமுதொடு கொணர்கேம்

உண்டி! யாம் உன் குறிப்பினம்; என்றலும்

… அந்நாள் அவன் உண்டு அருளிய அவ்வறம்

நின் ஆங்கு ஒழியாது, நின் பிறப்பு அறுத்திடும்" (காதை.10 : 35 - 41) என்ற அடிகளின் மூலம் அறியலாம். இது அன்னதானத்தால் அடையும் பயனை வெளிப்படுத்திய கதை ஆகும். மேலும் மணிமேகலை மணி பல்லவத்திலே தீவதிலகை என்னும் தெய்வத்தினைச் சந்தித்தாள். அப்போது மணிமேகலை, அமுதசுரபி என்னும் பிச்சைப் பாத்திரம் கிடைத்ததற்குக் காரணம் முன்பிறப்பிலே செய்த அன்னதானந்தான் என்று அறிவித்தாள் அதாவது "சென்ற பிறப்பிலே நான் விரும்பிய காதலன் உயிர் உண்ணப்பட்டான். நானும் அவனுடன் தீப்பாய்ந்து வெந்தேன். என் உணர்வு மறையும் போது உச்சிப் பொழுதில் என் முன் தோன்றிய சாதுசக்கர முனிவனுக்கு உணவளித்த காலத்தைப் போல ஒருகனவால் மயங்கினேன். அதன் பயனால்தான், அரிய உயிர்களைக் காக்கும் மருந்தாக இந்த அமுத சுரபி என் கையில் புகுந்தது" என்று கூறினாள் மணிமேகலை. இதனை,

"விட்ட பிறப்பில் யான் விரும்பிய காதலன்

திட்;டிவிடம் உணச் செல் உயிர் போஉழி

உயிரொடு வேவேன், உணர்வு ஒழி காலத்து

…சாது சக்கரன் தனையான் ஊட்டிய

காலம் போல்வது ஓர் கனாமயக்கு உற்றேன்

அங்கதன் பயனே ஆர் உயிர் மருந்தாய்

ஈங்கு இப்பாத்திரம் என்கைப் புகுந்தது" (காதை. 11: 99 - 106) என்ற அடிகள் மூலம் காட்டுகின்றார் சாத்தனார். இவ்வடிகள் மணிமேகலையே கூறியதாக அமைந்தவை. இவ்வடிகளும் அன்னதானத்தின் பயனை அறிவித்தன. காப்பியத்தில் வரும் மற்றொரு உணவுக் கொடையாளனாகிய ஆபுத்திரனூடாகவும் உணவறத்தின் பயன்களைச் சாத்தனார் கூறுகின்றார். ஆபுத்திரனின் உணவுக் கொடையைக் கண்டு வியந்த இந்திரன் வரம் கொடுக்க வந்தபோது. "இந்திரனே நீ தருவதாகக்கூறிய வரங்களின் பயன்களை நான் உணவுத்தானம் செய்தபோதே பெற்றுவிட்டேன். மக்களின் வாழ்த்திற்காகவும், புண்ணியத்திற்காகவும் நான் அவர்களின் பசியைப் போக்கவில்லை. உணவு உண்டபொழுதில் பசி நீங்கிய அக்கணத்தில் அவர்களின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியைக்காணவே உணவு வழங்கினேன். அவர்களின் மகிழ்ச்சியைக் கண்டபோதே, நீ தரவுள்ள வரங்களின் பலன்களை நான் பெற்றுவிட்டதாக உணர்கிறேன். என்கிறான்.

"வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்

திருந்து முகம் காட்டும் என தெய்வ கடிகை" (காதை.14: 44 - 45) என்று ஆபுத்திரன் இந்திரனிடம் கூறினான். இவ்வாறு உணவு அறத்தின் பலனைக் கூறுவதனூடாக, உலக உயிர்கள் அனைத்திற்கும் உணவளித்தல் எனும் அறத்தைச் செய்ய வேண்டும் என்றும், குறிப்பாகப் பசிப்பிணியால் வாடுவோருக்கே செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

## முடிவுரை

குறிப்பிட்ட காலச் சமூகத்தேவையின் பொருட்டு எழுந்த மணிமேகலை, பௌத்தமதக் கருத்துக்களைப் போதிப்பதோடு மட்டுமன்றி "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்…" (புறம் - 18) எனும் புறப்பாடலடியின் கூற்றை தலைமேற்கொணர்ந்து "மண் உயிர்க்கெல்லாம் உண்டியும், உடையும், உறையுளும் கொடுப்பதே உயர் அறம் என்கிறது. இதனையே வள்ளுவரும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் - 322) என்கிறார். புரட்சிக்கவிஞரும் "வயிற்றுக்குச்சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்று பாடுகின்றார். முடிவாக விருந்தோம்பலை முழு அறமாகப் போதித்த பெருமை மணிமேகலை எனும் காப்பியத்தையே சேரும். காலத்திற்குக்காலம் எழுந்த இலக்கியங்களிலும், அறங்கள் பேசப்படும் போது விருந்தோம்பலும் கூறப்பட்டு வந்துள்ளன. நாடு, மொழி, இன பேதங்கள் இல்லாமல் எல்லா மக்களும் பட்டினிக் கொடுமையில் இருந்து காக்கப்பட வேண்டும் என்ற உயர் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கு அடிப்படைத் தளத்தை வித்திட்டது மணிமேகலையே ஆகும். எனவே மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டிருந்த பசிப்பிணி என்னும் கொடிய பிணியை ஒழிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் சீத்தலைச்சாத்தனார் முயற்சித்து, மணிமேகலைக் காவியம் மூலம் வெற்றியும் பெற்றுள்ளார்.

## References

Devira. (2007). Tamil Literary Database, Sri Nandini Publishing, Chennai.

Gemstone, P. (1990). Epic scent, Poongodi Publishing, Chennai.

Seeththalaichchaththanar, (1998). Manimekai, U.V. Saminathiyar Library, Chennai.

### Acknowledgement

Nil

### Funding

This study was not funded by any grant

### Conflict of interest

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

### About the License

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

Murukaiya Sathees, Hospitality Virtue Taught by Saththanar: Study Based on The Manimekalai, Indian Journal of Tamil, 2(4) (2021) 1-8. https://doi.org/10.34256/ijot2141